(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(7).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 டிசம்பர் 15 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

## 2021 ஜனவரி 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

9/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு உரித்தான —

(i) கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நில அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கைத்தொழில் பேட்டைகளில் இயங்கும் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கைத்தொழில் பேட்டைகளில் தொழில் புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆம் ஆண்டில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் மத்திய மாகாணத்துக்காக —

(i) சுயதொழில் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட இடங்கள் யாவையென்பதையும்;

(iii) வழங்கப்பட்டுள்ள கருவிகள் யாவையென்பதையும்;

(iv) பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(v) மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது இணையத்தின் ஊடாக இலத்திரனியல் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிராமிய பிரதேசங்களில் வாழ்வோருக்குக்கும் திறந்துவிடப்பட்டுள்ள போதிலும், அதற்கான போதிய அறிவு வழங்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இவ்வறிவினை முறையாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

53/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை அரசுக்கு உரித்தான கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகாரசபைகள் போன்ற நியதிச்சட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களில் தற்போதுள்ள தவிசாளர்கள் மற்றும் பணிப்பாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி தவிசாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமனம் செய்யும் போது பின்பற்றிய நடவடிக்கைமுறை யாதென்பதையும்;

(v) அந்நிறுவனங்களை நிதிரீதியாகப் பலப்படுத்துவதற்கு அமைச்சு எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

100/2020

கௌரவ புத்திக பத்திரண,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மக்களின் சட்டப் பிரச்சனைகளுக்குத் துரிதமாக தீர்வு காண்பதற்கும், சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்கும் ஒரு நீதவான் நீதிமன்ற நியாயாதிக்கப் பிரதேசத்துக்கு குறைந்த பட்சம் தலா ஒரு சட்டத்தரணியை பொலிஸ் வழக்குகளை கையாளும் உத்தியோகத்தராக (Prosecutor) குறிப்பிட்ட நியாயாதிக்கப் பிரதேசத்திற்காக நியமிப்பதன் மூலம் இலங்கைப் பொலிஸிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் மக்கள் அதிக பயனடைவார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி புதிய பதவியினை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சாத்தியம் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

155/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அம்பதலே சமுத்திரதேவி மகளிர் வித்தியாலயத்தில் நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டிடத்தின் சுவர்கள் வெடிப்புக்குள்ளாகியுள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக மேற்படி பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) மேற்படி பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

227/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சோளத்தின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி சோளம் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி சோளம் இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு சோளத்தினை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

255/2020

கௌரவ வேலு குமார்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கண்டி மாவட்டத்தின் தெல்தோட்டை பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள போபிட்டிய தோட்டம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான தோட்டம் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டு அரசாங்கம் வசமிருந்த தோட்டங்களை மறுசீரமைப்புச் செய்த போது இத்தோட்டத்திற்கு சொந்தமாயிருந்த பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அத்தோட்டத்தில் முழுமையாக பயிர்செய்கை மேற்கொண்ட நிலப்பகுதியின் அளவு யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட தோட்டத்தில் 2015 ஆம் ஆண்டளவில் கைவிடப்பட்ட பிரிவுகள் உள்ளனவாவென்பதையும்;

(v) அவ்வாறாயின், அப்பிரிவுகளின் மொத்த நிலப் பகுதியின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பார?

(இ) (i) 1992 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இத்தோட்டத்திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் வெளித்தரப்பிற்கு/ தனியார்துறைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ் விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) இறுதியாக மேற்கொண்ட காணிக் கணக்கெடுப்புக்கு அமைவாக பயிர்ச்செய்கை மேற்கொண்ட காணிகள் மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளின் அளவு யாதென்பதையும்;

வெவ்வேறாக அவர் மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

348/2020

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சட்டரீதியான தன்மை யாதாக இருப்பினும் கூருணர்வுடைய சூழல் முறைமையொன்றில் வீதியொன்றை நிர்மாணிக்கும்போது சூழலுக்கு ஏற்படும் பாதிப்பினை ஆராய வேண்டும் என்பது சூழலியலாளர்கள் உட்பட பெரும்பான்மையான பொதுமக்களின் கருத்து என்பதால், அத்தகைய ஆய்வினை மேற்கொள்ள வேண்டுமென அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், கூருணர்வுடைய சூழல் முறைமையொன்றும் மற்றும் உலக உரிமையொன்றுமாகிய சிங்கராஜ வனத்தினூடாக லங்காகம எனும் கிராமத்திற்கு பாதையொன்று அமைப்பதற்காக அத்தகைய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய ஆய்வொன்று மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றீர்களா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி (அ) இல் குறிப்பிட்டுள்ள கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லையெனில், அதற்கான காரணம் யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

434/2020

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) டெங்கு நோய்த்தாக்கம் பல்வேறான சந்தர்ப்பங்களில் இலங்கையில் அதிகரிக்கின்றது என்பதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2019 ஆம் வருடத்தில் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) டெங்கு நோயை ஒழிப்பதற்காக தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் ஏதேனும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iii) பிரதேச டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்கள் உள்ளனர் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், அவர்களது சேவையை தொடர்ச்சியாகப் பெறுவதற்கு வேலைத்திட்டம் ஏதேனும் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

545/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காலி உணவட்டுன பிரதேசத்தில் அமைந்துள்ள ரூமஸ்ஸலை மலைப் பிரதேசமானது சுற்றாடல் கூர் உணர்வுமிக்க வலயமொன்றாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்படி தீர்மானம் மேற்கொள்கையில் குறித்த வலயத்தில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ள முடியாத, அரசாங்கத்திற்குரிய காணிப்பகுதிகள் பெயரிடப்பட்டுள்ளதுடன், அவ்வாறான பெயரிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா என்பதையும்;

(ii) மேற்படி தீர்மானம் காரணமாக, தற்போது அசௌகரியத்திற்கு உள்ளாகி இருக்கின்ற தனியார் காணி உரித்தாளர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

556/2020

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை குருணாகல் மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட பிரதான நீர் விநியோகத் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் உள்வாங்கப்படுகின்ற பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) அதன் மூலம் உள்வாங்கப்படுகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) மேற்படி நீர் விநியோகத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒவ்வொரு திட்டத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி நீர் விநியோகத் திட்டம் நிறைவுசெய்யப்படவுள்ள கால எல்லை ஒவ்வொரு திட்டத்திற்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

577/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை மகாவலி அதிகார சபையினால் மகாவலி "எல்" வலயத்திற்கென முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் இருந்து கையகப்படுத்தப்பட்ட காணியின் அளவினை ஹெக்டயர்களில் மற்றும் சதவீதத்தில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 1984 ஆம் ஆண்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் யுத்தத்திற்கு பின்னர் மேற்படி கிராமங்களில் குடியேறச் சென்ற போது அக்கிராமங்களில் சிங்கள மக்கள் குடியேறியிருந்தார்கள் என்பதையும்;

(ii) தமிழ் பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் குளங்களுக்கு சிங்கள பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) அனுமதிப் பத்திரம் உள்ள தமிழ் மக்களது காணிகள், இலங்கை மகாவலி அதிகாரசபையினால் அரசியல்வாதிகளின் உறவினர்களுக்கும் செல்வந்தர் களுக்கும் நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது காணிகளில் விவசாயம் செய்கின்ற போது, இலங்கை மகாவலி அதிகாரசபையினால் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின் மகாவலி "எல்" வலயத்தில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ள காணிகளைத் தவிர்ந்த எஞ்சிய காணிகள், கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு ஒப்படைக்கப்படுமா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

607/2020

கௌரவ கயந்த கருணாதிலக,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றளவில் சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவு வழங்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவை பெறுவதற்கு விண்ணப்பித்து இன்றளவில் காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவை ரூ. 2000.00 இலிருந்து ரூ. 2500.00 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

(v) வெளிநாட்டு யாத்திரைகளுக்கு, சிரேஷ்ட பிரஜைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் வேலைத்திட்டமேதும் உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதனை ஒருங்கிணைக்கின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

726/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் லக்கல, பள்ளேகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள லக்கல பிரதேச வைத்தியசாலையை புதிதாக நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை யாது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளக் கூடிய நோயாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) தற்போது மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்றுகின்ற வைத்தியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட தாதியர் பணியாட்டொகுதி யாது என்பதையும்;

(vi) தற்போது மேற்படி வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்டுள்ள தாதியர் பணியாட்டொகுதி யாது என்பதையும்;

(vii) தற்போது மேற்படி வைத்தியசாலையில் பேணிவரப்படுகின்ற சிகிச்சை நிலையங்களின் வகைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

770/2020

கௌரவ முஜிபுர் ரஹ்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு மாவட்டத்திலுள்ள பகுதியளவு அரசாங்க (semi government) பாடசாலைகள் அருகிலுள்ள வறிய பிள்ளைகளை அனுமதிக்காது அதன் குறிக்கோள்களில் இருந்து விலகிச் செல்கின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறெனில், கொழும்பு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பகுதியளவு அரசாங்க பாடசாலைகள் தொடர்பாக,

(i) பாடசாலைகளின் பெயர்களையும்;

(ii) சமயம் மற்றும் சமயம் சாராத வகுதிகளையும்;

(iii) இனம் மற்றும் சமய அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையையும்;

(iv) முதலாம் தரம் முதல் ஐந்தாம் தரம் வரையில் ஆங்கிலத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட இருமொழி வகுப்புகளின் எண்ணிக்கையையும்;

(v) அயலிலுள்ள வறிய மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையையும்;

அவர் கூறுவாரா?

(இ) மேற்குறிப்பிடப்பட்ட பாடசாலைகள் தொடர்பாக,

(i) முதலாம் தரம் முதல் ஐந்தாம் தரம் வரையில் ஆங்கில மொழி மூலம் வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) முதலாம் தரத்திற்கு அனுமதித்தல் தொடர்பான பொது வழிகாட்டல்களை ஏன் பின்பற்றமுடியாது என்பதையும்;

(iii) தற்போது மாணவர்களை அனுமதிக்கும் செயன்முறை, வெளிப்படைத்தன்மை, மற்றும் செயலாற்றுகை ஆகியவற்றில் அரசாங்கம் திருப்தியடைகின்றதா என்பதையும்;

(iv) கற்பித்தல் மற்றும் முகாமைத்துவ செயன்முறைகளை சீர் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

838/2020

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2019 இற்கு அமைவாக அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அனைவருக்குமான ஓய்வூதியமானது நியாயமான முறையில் அதிகரிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) அதன் காரணமாக ஓய்வு பெற்றவர்கள் வெறுப்படைந்துள்ளனர் என்பதையும்;

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைவாக ஐந்து கட்டங்களின் கீழ் அதிகரிக்கும் இறுதி சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியத்தை கணிக்க வேண்டுமெனினும், பொது நிர்வாக சுற்றறிக்கை 14/2019 இற்கு அமைவாக 2017.01.01 திகதிக்குரியதாக இரண்டு கட்டங்களின் கீழான சம்பளத்தின் அடிப்படையில் மாத்திரமே ஓய்வூதியம் கணிக்கப்பட்டதன் காரணமாக 2016.01.01 திகதிக்கு முன்னர் ஓய்வளிக்கப்பட்ட முப்படை மற்றும் பொலிஸ் வீரர்கள் உட்பட அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற சகலருக்கும் பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைவாக ஐந்து கட்டங்களின் கீழ் அதிகரிக்கப்படவிருந்த இறுதிச் சம்பளத்தின் அடிப்படையில் ஓய்வூதியத்தை கணிக்க நடவடிக்கை எடுத்திருப்பின் 2020.01.01 திகதிக்கு முன்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதிய முரண்பாடு நீக்கப்பட்டு அவர்களுக்கு நியாயம் கிடைக்கப்பெறும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இனை துரிதமாக நடைமுறைப்படுத்தி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு நியாயம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 ஜனவரி 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

22/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2020.08.31 ஆம் திகதியளவில் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிதிக் கம்பனிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் 2020.08.31 ஆம் திகதி வரையில் நிதி நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து நிதிக் கம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு நிதிக் கம்பனியிலும் வைப்புக்களைப் பேணி வந்துள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக இதுவரையில் எடுக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

66/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை புகையிரத போக்குவரத்து சேவைக்கு இணைக்கப்பட்டுள்ள புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி புகையிரதப் பெட்டிகளில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நமது நாட்டில் புகையிரத பெட்டிகளை உற்பத்தி செய்வதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

108/2020

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள சிறுவர்களுக்கு வழங்கப்படும் திரிபோஷ துணை போசணை போதியளவிலும் ஒழுங்குமுறையாகவும் கிடைப்பதில்லை என்பதையும்;

(ii) சிறுவர் மந்தபோசணை கணிசமானளவு காணப்படுவதற்கு இவ்விடயமும் காரணமாக அமைகின்றதென்பதையும்;

(iii) இதன் காரணமாக பிள்ளைகளைக் கொண்டிருக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தற்போது, ஆண்டுக்கான திரிபோஷ உற்பத்திக் கொள்ளளவு எத்தனை கிலோகிராம் என்பதையும்;

(ii) ஓராண்டின் நுகர்வுக்காக எத்தனை கிலோகிராம் திரிபோஷ தேவைப்படுகின்றதென கணிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்தளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) நாட்டின் தேவைக்கு போதுமானளவு திரிபோஷ உற்பத்திசெய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எப்படியென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

168/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெஹிவளை - கல்கிசை பிரதேச செயலகப் பிரிவில் காணி உறுதி உரித்து இல்லாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வீடுகளுக்கு உறுதிகளை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் முறையை தெளிவுப்படுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

190/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இலங்கையிலுள்ள கிரிக்கட் விளையாட்டு சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் 25 நிர்வாக மாவட்டங்களுக்கும் 25 கிரிக்கட் சங்கங்கள் உள்ளன என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிரிக்கட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இற்றை வரையில் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிரிக்கட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இற்றை வரையில் அனுமதி பெற்றுக்கொடுக்காமைக்கு;

(ii) பதிவைக் கோரி கிளிநொச்சி மாவட்ட கிரிக்கட் சங்கம் பல சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்திருந்தும் இற்றை வரையில் பதிவு செய்யாமைக்கு;

காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) 2010 ஆம் ஆண்டின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட கிரிக்கட் சங்கத்திற்காக விளையாட்டு அமைச்சினால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உதவிகள் யாவை என்பதையும் அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

228/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பழங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பழங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி பழங்கள் இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு பழங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

438/2020

கௌரவ சாந்த பண்டார,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையிலுள்ள இளைஞர், யுவதிகளின் ஆற்றல்களை மேம்படுத்துவது தொடர்பில் தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பயிற்சி நிலையங்களை அமைக்கும் போது மாவட்ட அடிப்படையில் அல்லது பிரதேச செயலக அடிப்படையில் கவனத்திற் கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) மேற்படி பயிற்சி நிலையங்களில் இருந்து பயிற்சியினைப் பெற்று வருடாந்தம் வெளியேறும் இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை அண்ணளவாக எத்தனையென்பதையும்;

(iv) வெற்றிகரமாக பயிற்சியினைப் பூர்த்தி செய்யும் இளைஞர், யுவதிகளை தொழில்வாய்ப்பில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(v) இன்றேல், அவர்களது எதிர்காலத்தினை வெற்றிகரமானதாக்கும் முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

481/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) புத்தளம் மாவட்டத்தின் வனாதவில்லு, பழைய எழுவாங்குளம் பிரதேசத்தில் நீண்டகாலமாக அகழ்வு அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோத மணல் அகழ்வு வியாபாரம் இடம்பெற்று வருவதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சட்டவிரோத மணல் அகழ்வு வியாபாரத்தைத் தடுப்பதற்கு அமைச்சினால் —

(i) இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்;

(ii) எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள்;

யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

547/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹபராதுவ, அக்மீமன, காலி மற்றும் ரத்கம ஆகிய பிரதேசங்களில் கடும் குடிநீர் தட்டுப்பாட்டுப் பிரச்சினையொன்று காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரச்சினைக்குத் தீர்வாகிய மாகாலி நீர் வழங்கல் திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒதுக்கப்படும் அப்பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பிரதேசங்களில் காணப்படுகின்ற குடிநீர் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத்தரும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

558/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலேவெல பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான தேவஹுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள, கல்பொக்க யாய எனும் கிராமத்தில், கலேவெவ - கலாவாவி வீதியில், புலன வாவி கற்குழிக்கும் பிரதான வீதிக்கும் அருகாமையில் அமைந்துள்ள நிலப்பிரதேசம் வன ஒதுக்கமாக அமைந்துள்ளமையால் இது வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு உரித்தாகின்றது என்பதையும்;

(ii) ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்றினால் 2020.09.22 ஆம் திகதி அதிகாலையில் மேற்குறிப்பிட்ட நிலப்பரப்பில் நிரந்தர கட்டிடமொன்றும் சில தற்காலிக நிர்மாணப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிர்மாணப் பணிகளுக்கு பிரதேச செயலாளரது அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், பொறுப்புக் கூற வேண்டிய பிறிதொரு அரசாங்க உத்தியோகத்தர் அல்லது நிறுவனத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இன்றேல், இந்த நிர்மாணப் பணிகளை அகற்றி, வன ஒதுக்கத்தைப் பாதுகாப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

581/2020

கௌரவ வேலு குமார்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தெல்தெனிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மாபேரிதன்ன அரச விலங்குப் பண்ணையானது, தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையினால் (NLDB) நிருவாகிக்கப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பண்ணையில் பணிபுரியும் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை;

(ii) வசிக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை;

(iii) அமைக்கப்பட்டுள்ள தொழிலாளர் குடியிருப்புகள் மற்றும் லயன்களின் எண்ணிக்கை;

(iv) அமைக்கப்பட்டுள்ள மொத்த லயன் அறைகளின் எண்ணிக்கை;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட பண்ணையில், லயன் அறைகளில் வசிக்கின்ற குடும்பங்களுக்கு தனி வீடுகளை நிர்மாணிப்பதற்காக கடந்த காலப்பகுதியில் காணிகள் வழங்கப்பட்டதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி பண்ணையில் வசிக்கின்ற ஆனால் லயன் அறைகளில் வசிக்காத குடும்பங்களுக்கு காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

603/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் மாவட்டத்தின் மத்திய நுவரகம—பலாத்த பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 308 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அசிரிக்கம வீதியில் காகொல்லேவ சந்தியிலிருந்து கட்டுக்கெலியாவ சந்தி வரை சுமார் 2 கி.மீ. தூரத்தைக் கொண்ட பகுதி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது என்பதை அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதிப் பகுதியை புனரமைக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

635/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தின் பழுகாமம், வீரச்சேனை, மாயாபுரம் மற்றும் வன்னி நகர் ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் குடிநீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமங்களில் வாழும், குடிநீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி கிராம மக்களுக்கு குடிநீர் வழங்க நீர்க் குழாய்களை பொருத்த வேண்டிய தூரத்தின் அளவு யாது என்பதையும்;

(iii) மேற்படி கிராமங்களில் நிலவும் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

727/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அப்போதைக்கு அதிகாரத்திலிருந்த சனாதிபதியினால் 2013 சனவரி 15 ஆம் திகதி பிரதம நீதியரசர் பதவிக்கு, அரசியலமைப்புக்கு அமைவாக நியமிக்கப்பட்ட திரு. மொஹான் பீரிஸின் நியமனமானது பின்னர் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) திரு. மொஹான் பீரிஸின் பிரதம நீதியரசர் பதவிக்கான நியமனம் யாரால் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

771/2020

கௌரவ முஜிபுர் ரஹ்மான்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் 2019.04.21 முதல் நூற்றுக்கணக்கான ஆட்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறெனில் 2019.04.21 முதல் 2019.11.16 வரை மற்றும் 2019.11.17 முதல் இன்று வரையிலான காலப்பகுதியில் —

(i) விசாரணைக்காக கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ளவர்கள்;

(ii) தடுத்து வைத்திருத்தல் உத்தரவை நீடித்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள்;

(iii) குற்றப்பத்திரத்துடன் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டவர்கள்;

ஆகியோரின் எண்ணிக்கையை அவர் தனித்தனியாக இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) பிணை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்ட அல்லது விடுதலை செய்யப்பட்ட ஆட்களின் பெயர்களையும்;

(ii) தற்போதைய விசாரணை செயன்முறையில் அரசாங்கம் திருப்தியடைகிறதா என்பதையும்;

(iii) சிறு குற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஆட்களை விடுதலை செய்வதற்கும் நீடித்த தடுத்து வைத்தல் கட்டளைகளின் கீழ் உள்ள சந்தேக நபர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2021 ஜனவரி 21, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

26/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வேலையற்ற பட்டாதரிகளை நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் அரச நிறுவனங்களில் பயிலுநர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்வதற்கு 2020 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பத்திரத்திற்கு அமைவாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நேர்முகப் பரீட்சைக்காக தோற்றிய பட்டதாரிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) நேர்முகப் பரீட்சையின் பின்னர் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்த பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளும் போது இப்பட்டதாரிகள் வெளிவாரி மற்றும் உள்வாரி பட்டதாரிகள் என்ற அடிப்படையில் வகைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனின், சேர்த்துக்கொள்ளப்பட்ட வெளிவாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் உள்வாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்ட அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) வெளிவாரி பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை பெற்றுக்கொடுக்கும் போது சிக்கலான நிலைமை தோன்றியமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

130/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள மாநகர சபைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி மாநகர சபைகளில் கழிவுகளை அகற்றும் விடயத்தை தனியார் நிறுவனங்களுக்கு கையளித்துள்ள மாநகர சபைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மாநகரசபைகளின் கழிவுகளை அகற்றும் பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ள தனியார் கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி கம்பனிகளுக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊழியர்களை ஈடுபடுத்தி அவற்றின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள கழிவுகளை அகற்றுவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

169/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலொன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் காணி உறுதியற்ற வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வீடுகளுக்கு உறுதியினை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

229/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பால் மா எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி பால் மா இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு பால் மாவை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

267/2020

கௌரவ புத்திக பத்திரண ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொத்மலையில் அமைந்துள்ள நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் பற்றிய சர்வதேச பயிற்சி நிறுவனத்தில் பயிற்சிப்பெற்றுள்ள பொறியியல் உதவியாளர் இரண்டாம் குழுவின் பயிலுனர்கள் 71 பேர் இதுவரை நிரந்தர சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) தற்போது அவர்களின் பயிற்சி நிறைவடைந்து ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ளது என்பதையும்;

(iii) பிராந்திய அலுவலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றி வருகின்ற போதிலும், அவர்களுக்கு முறையான சம்பளம் செலுத்தப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பயிலுனர்கள் நிரந்தர சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

419/2020

கௌரவ வருண லியனகே,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் தோட்டங்களில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது?

(ii) இவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(v) அவ்வாறாயின் காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் சார்ந்துள்ள தோட்டக் கம்பனிகளின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) காணிகளற்ற தோட்டக் குடும்பங்களுக்கு காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை எத்தகைய நடவடிக்கைகள் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

451/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மொரகஹகந்த - களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வட மத்திய மாகாணத்திற்கு நீர் வழங்கும் நடவடிக்கையாக தற்போது பொலன்னறுவை மாவட்டத்திற்கு நீர் வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படிக் கருத்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்திற்கு நீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி திட்டங்களின் மூலம் குருளுவெவ வாவி மற்றும் கணதராவவெவ வாவி என்பவற்றுக்கு நீர் வழங்குவதற்கான திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

483/2020

கௌரவ துஷாரா இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய கமத்தொழில் தகவல், தொடர்பாடல் நிலையத்தினால் இலங்கையின் பயிர்நிலையங்களில் கிருமிநாசினி, களைநாசினி மற்றும் உரப் பயன்பாடு தொடர்பாடல் ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) கிருமிநாசினி, களைநாசினி மற்றும் உரம் பயன்படுத்தி பயிர்செய்யும் நாடுகளில் இலங்கை முன்னிலை அடைந்துள்ள நாடொன்று என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கிருமிநாசினி, களைநாசினி மற்றும் உரம் பயன்படுத்தி பயிர் செய்கை மேற்கொள்வதைக் குறைப்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

544/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு:— (1)

(அ) (i) மண்சரிவு அபாயமுள்ள மாவட்டங்களில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் பெற வேண்டிய நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) அத்தகைய நிறுவனங்கள் மூலம் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படும் வழிமுறை யாதென்பதையும்;

(iii) அந்த வழிமுறைக்கமையவே கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படுகின்றதா என்தையும்;

(iv) இன்றேல், அதற்கென எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மண்சரிவு அபாயம் இல்லாத மாவட்டங்களில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகார சபையினால் மட்டுமே அங்கீகாரம் வழங்கப்படுகிறது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டங்களில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தினால் மேற்பார்வை செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்பார்வை செய்யப்படுமாயின், கட்டிடங்கள் வகைப்படுத்தப்பட்டு அங்கீகாரம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) இன்றேல், எதிர்காலத்தில் அவ்வாறானதொரு வேலைத்திட்டம் தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

636/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான தமிழ் பிரதிநிதிகள் பிரதிநிதித்துவம் செய்கின்ற பிரதேச சபைகளை நகர சபைகளாக தரமுயர்த்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

639/2020

கௌரவ ரஊப் ஹகீம்,— வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஏதேனும் நிலப் பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசமாக வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்படுவதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகள் யாவை என்பதையும்;

(ii) வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இதுவரை பிரகடனப்படுத்தப் பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு வனப் பிரதேசமும் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட திகதி, அதில் உள்ளடங்கும் நிலப்பரப்பு மற்றும் தொடர்புடைய வரைபடங்கள் அனைத்தும் பற்றிய விபரங்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவு மட்ட வாரியாக தனித்தனியாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

729/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகல் தொடக்கம் கலேவல பிரதேச செயலாளர் பிரிவின் ஊடாக தம்புள்ளை வரை புகையிரத வீதியொன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதை அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், அதற்கொன ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் வேலைகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

777/2020

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திற்குரிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வதியும் காணி உறுதி உரித்து இல்லாதவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களுக்கு உறுதிகளை வழங்குவதற்கான முறையியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனின், அந்த முறையியல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

839/2020

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களில் தற்போது கோவிட் – 19 வைரஸ்,-

(i) தொற்றியுள்ள;

(ii) தொற்றிய பின்னர் குணமடைந்துள்ள;

(iii) தொற்றியதன் விளைவாக மரணமடைந்துள்ள;

(iv) காரணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ள;

தொழிலாளர்களின் எண்ணிக்கை அவர்கள் பணியாற்றும் நாடுகளுக்கு அமைவாக தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைரசு தொற்றியதன் விளைவாக இற்றைவரை தொழில்வாய்ப்புகளை இழந்துள்ள இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை அவர்கள் பணியாற்றும் நாடுகளுக்கு அமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மேற்கோள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) கோவிட் – 19 உலகளாவிய தொற்றுநோய் நிலைக்கு உள்ளாகிய புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களது குடும்பங்களுக்கு பணம் அனுப்பாததால் பொருளாதார அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி தொற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்புக்கைக்காக சம்பந்தப்பட்ட நாடுகளின் தூதரகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளின் அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

877/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு மற்றும் சட்ட வரையறைகளை விட மிகையாக கடன் வழங்குவதற்கு முன்னர் சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனை பெறப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனையை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) 2020 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு ரீதியாகவும் சட்டரீதியாகவும் குறித்துரைக்கப்பட்ட கடன்பெறுகை வரையறைக்கு அப்பால் வழங்கப்பட்ட கடன், கடனை செலுத்தத் தவறும் பட்சத்தில் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படும் ஏனைய அனைத்துக் கடன்களுக்கு சமமாக கருதப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய வரவுசெலவுத்திட்ட 01/2020 ஆம் இலக்க சுற்றுநிருபம் பற்றி சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனை பெறப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனையை அடிப்படையாகக்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2021 ஜனவரி 22, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

27/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தள சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதி திரட்டப்பட்ட மூலங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மத்தள சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்ட திகதி தொடக்கம் இதுவரை -

(i) கிடைத்த வருமானம்;

(ii) பராமரிப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை;

தனித்தனியே எவ்வளவென்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி விமான நிலையம் திறக்கப்பட்ட திகதி தொடக்கம் இற்றைவரையில் அங்கு வந்திறங்கிய விமானங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி விமானங்கள் எந்தெந்த விமானசேவை நிறுவனங்களுக்குச் சொந்தமானவை என்பதையும்;

(iii) இக்காலப்பகுதியில் மேற்படி விமானநிலையத்தின் ஊடாக பயணித்த பயணிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) இவ்விமான நிலையத்தை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

135/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் வெளிநாட்டு தூதுக்குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தூதுக்குழு அமைந்துள்ள நாடுகள் மற்றும் நகரங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு தூதுக்குழுவிலும் சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் பதவிப் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஊழிர்களில் நேரடியாவே இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கான ஆட்சேர்ப்பு பரீட்சையில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது பெயர்கள் யாவை என்பதையும்;

(v) வெளிநாட்டு தூதுக்குழுக்களில் சேவையாற்றும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் இலங்கை வெளிநாட்டுச் சேவையில் நேரடியாக உள்ளடங்கும் ஊழியர்களின் விகிதாரசாரம் யாதென்பதையும்,

(vi) வெளிநாட்டு தூதுக்குழுக்களில் சேவையாற்றுவதற்காக இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கு கூடுதலாக உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கு அமைச்சு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்தையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

191/ 2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கிளிநொச்சி, நகர மத்தியில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானத்தை சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்வதற்கு 2010 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்குப் பத்து ஆண்டுகள் கடந்துள்ளபோதும், அந்த மைதானத்தை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டுக்காக இதுவரை ஒப்படைக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானம் சர்வதேச மட்டத்திலான விளையாட்டு மைதானமா; இன்றேல் மாவட்ட மட்டத்திலான விளையாட்டு மைதானமா என்பதையும்;

(ii) விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி தொகையில் கடந்த பத்து வருட காலப்பகுதியில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ள ஒப்பந்தக்கார்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) நிர்மாணப் பணிகளை மேற்கொள்கின்ற தற்போதைய ஒப்பந்தக்காரரின் பெயர் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தின் புனர்நிர்மாணப் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதம், மாவட்டத்திலுள்ள விளையாட்டு வீரர்களின் செயற்பாடுகளுக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதையும்;

(ii) மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை முன்னேற்றுவதற்காக அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

230/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மரக் கட்டைகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மரக் கட்டைகள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மரக் கட்டைகள் இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மரக் கட்டைகளை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

317/2020

கௌரவ புத்திக பத்திரண,— இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மெய்வல்லுனர் விளையாட்டுக்களை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொகையில் அரசாங்க பாடசாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள பிள்ளைகளின் மெய்வல்லுனர் திறமைகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மெய்வல்லுனர் விளையாட்டுக்களின் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு வீரர்களை வழிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் சங்கம் மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய சங்கங்களின் நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் சம்பந்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகளில் சம்பந்தப்படுகின்ற முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

453/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அனுராதபுர மாவட்டத்தின் கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலகப் பிரிவின் 215 ஆம் இலக்க திவுல்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் பம்பரஎல கிராமத்தில் 1973 ஆம் ஆண்டு தொடக்கம் சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் அறுதி உறுதிகளுடன் கூடிய காணிகளுக்கு வனசீவராசிகள் உத்தியோகத்தர்கள் பிரவேசித்து ஒதுக்க எல்லைகளை அடையாளமிட்டு எல்லைக் கற்கள் இட்டுள்ளனர் என்பதை அறிவாரா?

(ஆ) ஆமெனில், இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

485/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் சந்தைப்படுத்தல் சபை ஸ்தாபிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அது ஸ்தாபிக்கபட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) நெல் சந்தைப்படுத்தல் சபையினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஒவ்வொரு போகத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு யாது என்பதையும்;

(iv) தனியார் துறையின் வியாபாரிகளினால் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்படுவதை தவிர்க்கும் பொருட்டு நெல் சந்தைப்படுத்தல் சபையை வலுவூட்ட அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

528/2020

கௌரவ ரோஹண பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண சபைக்குரிய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இப்பாடசாலைகளில் தற்சமயம் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடங்களுக்கு அமைவாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

560/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் இன்றளவில் பேணி வரப்படுகின்ற நெல் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) தனியாரினால் பேணி வரப்படுகின்ற நெல் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அத்தகைய நெல் களஞ்சியசாலைகள் ஒவ்வொன்றிலும் இன்றளவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்லின் அளவு தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி களஞ்சியசாலைகளுக்கு மேலதிகமாக புதிய களஞ்சியசாலை நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டிருக்கின்றதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) விவசாயிகளுக்கு இன்றளவில் இலவசமாக உரம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒரு விவசாயிக்கு எவ்வளவு உரம் வழங்கப்படுகிறது என்பதையும்;

(iii) அவ்வாறு இலவசமாக வழங்கப்படுகின்ற உர வகைகள் யாவை என்பதையும்;

(iv) அரசாங்கம் அதற்காக எவ்வளவு தொகையினைச் செலவிடுகின்றது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

590/2020

கௌரவ எஸ்.எம்.எம். முஷாரப்,— சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள பிரபல சுற்றுலா வலயமொன்றான அறுகம்பே கரையோரப் பிரதேசமானது உலகில் நீர்ச்சறுக்கல் விளையாட்டுக்கு பிரசித்திப் பெற்ற முதல் பத்து இடங்களில் ஒன்றென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அறுகம்பே பிரதேசம் இதுவரை சுற்றுலா வலயமொன்றாக பிரகடனம் செய்யப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப்பயணிகள் வருகை தருகின்ற இடமொன்றான அறுகம்பே பிரதேசத்தில் சுற்றுலாப்பயணிகளுக்குத் போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இல்லையென அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், சுற்றுலாப்பயணிகளுக்கு போதியளவில் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

610/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குளியாப்பிட்டி ஆதார வைத்தியசாலை, போதனா வைத்தியசாலையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையை இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின், மருத்துவ பீடத்தின் பிணியாய்வு பயிற்சிகளுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) இது தொடர்பான விடயங்களை ஆய்வு செய்வதற்காக மூன்றுபேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் மற்றும் குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலை தொடர்பில் பேராசிரியர் அலகு அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அலகினை குளியாப்பிட்டி வைத்தியசாலையில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

642/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கீழ் மல்வத்துஓயா நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக முன்னாள் பிரதமரினால் அடிக்கல் நடப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம் எவ்வளவென்பதையும்;

(iii) நீர்ப்பாசன திணைக்களம், சீன நிறுவனம் ஆகிய இரண்டில் இக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனம் யாதென்பதையும்;

(iv) சீன நிறுவனத்தினால் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படுமாயின், அதற்கான மதிப்பீட்டுச் செலவினம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

722/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாவட்ட மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கும் மன்னார் மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் கட்டிடம் மிகவும் பழைமையானது எனவும்;

(ii) மேற்படி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவினை நிர்மாணிப்பதாக கடந்த காலத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டபோதிலும், இதுவரையில் அதன் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பெரும்பாலான மருத்துவ பரிசோதனைகள் இந்த வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையும்;

(ii) சீ.டீ.ஸ்கென் (CT SCAN), நரம்பியல் (NEUROLOGY), தொண்டை, காது, மூக்கு (ENT), எலும்பியல் (ORTHOPAEDIC), புற்றுநோயியல் (ONCOLOGY), பிறப்புறுப்பு சார்ந்த (UROLOGY), சிறுநீரகவியல் (NEPROLOGY), (OMF) ஆகிய துறைசார் பரிசோதனைகளை இந்த வைத்தியசாலையில் மேற்கொள்ள முடியாத ஒரு நிலை காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) மேற்படி துறைசார் பரசோதனைளை மீண்டும் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்பிக்க முடியுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

732/2020

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாடுகளுக்கிடையே பொருட்களை விற்பனை செய்வதற்கு இலகுமான முறை "ஈ – வர்த்தகம்" (E – Commerce) இணையத்தளமூடான விற்பனையாக இருப்பதனால், அதற்காக சுமார் 305 மில்லியன் அளவிலான உலக மக்கள் "பே பேல்" (Pay Pal) மற்றும் "கேட்வே" (Gateway) என்பவற்றைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(ii) இலங்கையின் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு மேற்படி முறையினைப் பயன்படுத்த முடியுமென்பதையும்;

(iii) இலங்கை மத்திய வங்கியால் மேற்படி முறையானது இலங்கையில் ஆரம்பிக்கப்படாமையால் பொருட்கள் / சேவைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து, அந்நியச் செலாவணியை பெறக்கூடிய வருமான வழியானது தடைப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) இலங்கையில் காணப்படுகின்ற "இணையவழி" (online) முறைக்கமைய சேவைகளை வழங்கும் சிறுவனங்கள் வெளிநாட்டு முகவரிகளைப் பயன்படுத்தி "பே பேல்" (Pay Pal) கணக்குகளைத் தயார் செய்கின்றன என்பதையும்;

(v) இதன் காரணமாக இலங்கைக்கு கிடைக்கக் கூடிய பெருமளவு நிதியை தரகுப் பணமாக வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் உற்பத்திகள், சேவைகள் “இணையவழி” (online) முறைமைக்கமைய வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கையில் காணப்படும் தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

773/2020

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் இயங்கி வரும் சர்வதேச பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) சர்வதேச பாடசாலைகளை நிறுவுதல், ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், கட்டணம் அறவிடுதல் மற்றும் இதர நடவடிக்கைகளின் போது அப்பாடசாலைகளை ஒழுங்குபடுத்த அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2021 பெப்ரவரி 09, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

28/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் இனம் காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு நோயை தடுப்பதற்கு தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுள்ள செயன்முறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

136/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இலங்கை முழுவதிலும் இடம்பெற்றுள்ள மின்சாரத் தடைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி மின்தடைகள் இடம்பெற்ற திகதிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மின்தடைகளின் பின்னர் நியமனம் செய்யப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி குழுக்களினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் யாவை என்பதையும்;

(v) இலங்கைக்கு 24 மணித்தியாலம் முழுவதும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க அமைச்சு வசமுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

231/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மிருகக் கொழுப்பு / மரக்கறி எண்ணெய்யின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மிருகக் கொழுப்பு / மரக்கறி எண்ணெய் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மிருகக் கொழுப்பு மற்றும் மரக்கறி எண்ணெய் இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மிருகக் கொழுப்பு மற்றும் மரக்கறி எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

318/2020

கௌரவ புத்திக பத்திரண,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உதைப்பந்தாட்ட விளையாட்டை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி தொகையில் அரசாங்க பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள பிள்ளைகளின் உதைப்பந்தாட்டத் திறமைகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உதைப்பந்தாட்ட விளையாட்டின் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு வீரர்களை வழிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம் மற்றும் அத்துடன் இணைந்த ஏனைய சங்கங்களின் நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் சம்பந்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகளில் சம்பந்தப்படுகின்ற முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

530/2020

கௌரவ ரோஹன பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண சபையினால் நிர்வாகம் செய்யப்படும் வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த நிலையங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலைக்குமென அனுமதிக்கப்பட்ட வைத்திய அலுவலர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் தற்போது பணியாற்றும் வைத்திய அதிகாரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) அனுராதபுரம் மாவட்ட வைத்தியசாலைகளில் நிலவும் வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

563/2020

கௌரவ சாந்த பண்டார,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் நிலவும் யானை - மனித மோதல் காரணமாக மனித உயிர்கள் மற்றும் சொத்துக்கள் அழிவடைகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) காட்டு யானைகள் தாக்கியதன் மூலம் 2019 ஆம் ஆண்டு ஏற்பட்ட மனித உயிரிழப்புக்கள் மாகாண ரீதியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) தற்போது ஒரு மனித உயிரிழப்புக்காக செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டு சேதமடைந்த சொத்துக்களுக்காக செலுத்தப்பட்டுள்ள மொத்த நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) காட்டு யானை அச்சுறுத்தலில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

582/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்களை மறுசீரமைக்கும் திட்டமொன்று 1992 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதென்பதையும்;

(ii) அச்சந்தர்ப்பத்தில் 22 பிராந்திய தோட்டக் கம்பனிகளுக்கு அரசாங்கத் தோட்டங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி கம்பனிகளில் அநேகமான கம்பனிகள் தமது குத்தகை உரிமையினை வேறு நிறுவனங்களுக்கு தற்போது அளித்துள்ளன என்பதையம்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரச தோட்டங்களை குத்தகைக்குப் பெற்ற தோட்டக் கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) தோட்டங்கள் குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட ஆரம்ப கம்பனிகளிடமிருந்து குத்தகை உரிமையினைப் பெற்றுக்கொண்டு தற்பொழுது தோட்டங்களை நிருவகிக்கின்ற நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஆரம்ப குத்தகைக்காரருக்கு அவர்கள் பெற்றுக்கொண்ட அரசாங்கத் தோட்டங்களை இதர நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு சட்ட ரீதியான ஏற்பாடுகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி குத்தகை தொடர்பிலான சட்ட ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

596/2020

கௌரவ சிவஞானம் சிறிதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தில், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவின் அனலைத்தீவில் அமைந்துள்ள ஒரேயொரு வைத்தியசாலையான அனலைத்தீவு வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பான விபரம் யாது என்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலைக்கென இதுவரை நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்,

(iii) வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமை காரணமாக அனலைத்தீவில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்குவதற்காக நெடுந்தீவு வைத்தியசாலையில் காணப்படுகின்ற பதவியணி வெற்றிடங்கள் எத்திகதியில் நிரப்பப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

604/2020

கௌரவ இஷாக் ரஹுமான் ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தின் மஹாஇலுப்பல்லமவில் அமைந்துள்ள களப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துக்குச் சொந்தமான முழு நிரப்பரப்பின் அளவு;

(ii) அவற்றில் விதை உற்பத்தி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(iii) கள ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(iv) பண்ணை பொறித்தொகுதி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(v) பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத நிலப் பரப்பின் அளவு;

ஏக்கர்களில் எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத நிலப்பரப்பினை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

637/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள குளங்களுக்குரிய கருத்திட்டம் மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்கள் கடந்த காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி குளங்கள் மறுசீரமைக்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டில் மறுசீரமைப்பதற்கு தேர்ந்தேடுக்கப்பட்டுள்ள குளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

654/2020

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஏற்புடைய மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் சேனைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக அரசாங்கம் தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளதா என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி தீர்மானத்தின் மூலம் உள்வாங்கப்படுகின்ற வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் சேனைப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள காணிகளின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(iii) மேற்படி தீர்மானம் காரணமாக துப்புரவு செய்யப்படுகின்ற மேலதிக காணிகளின் விஸ்தீரணம் ஹெக்டயர்களில் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

758/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் கொள்ளப்படும் வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்கள் அமைந்துள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை;

(iii) அவற்றுக்கு மத்தியில் அதிகளவான வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்கள் அமைந்துள்ள பிரதேசம் யாது;

(iv) மேற்படி வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்களின் நீரின் கொள்ளளவு வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மாவட்டத்தில் அமைந்துள்ள 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை புனரமைக்கப்பட்டுள்ள அத்தகைய வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை யாது;

(ii) புனரமைக்கப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ள வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவற்றுக்கு மத்தியில் 2020 ஆம் ஆண்டில் புனரமைக்கப்படவுள்ள வாவிகள் மற்றும் அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை யாது;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

847/2020

கௌரவ வருண லியனகே,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் அனர்த்த நட்டஈடு வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iii) இவ்வாறு அனர்த்த நட்டஈடு வழங்கப்படாதுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) அனர்த்த நட்டஈடு வழங்கப்படாதுள்ள குடும்பங்களுக்கு அனர்த்த நட்டஈடு வழங்குவதற்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

853/2020

கௌரவ அஜித் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதுள்ள பீல்ட் மாஷல் பதவி வகிக்கும் நபர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவர்களது பெயர்கள் மற்றும் அவர்கள் ஓய்வுபெறவுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு பீல்ட் மாஷலுக்கும் செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், வழங்கப்பட்டுள்ள பணியாட்குழுவினரின் எண்ணிக்கை, உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை, உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய அளிப்புகள் வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(இ) இன்றேல், ஏன்?

939/ 2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ நலனோம்புகை அமைப்புகள் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தன்னார்வ நலனோம்புகை அமைப்புகளின் பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு அத் திணைக்களத்தினால் ஏற்புடைய அமைப்புகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்ட தன்னார்வ நலனோம்புகை அமைப்புகளின் பதிவுகளை இரத்துச் செய்தமைக்கான அடிப்படை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2021 பெப்ரவரி 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

29/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 70 வயதைப் பூர்த்தி செய்துள்ள சிரேஷ்ட பிரசைகளுக்கு செலுத்தப்படுகின்ற மாதாந்தக் கொடுப்பனவு ரூ.2000/= ஆகும் என்பதையும்;

(ii) அவ்வாறு செலுத்தப்படுகின்ற கொடுப்பனவில் ரூ 100/= 2016 சனவரி மாதம் முதல் செலுத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டு வருகின்றது என்பதையும்;

(iii) இவ்வாறு நிதியை தடுத்து வைத்துக் கொள்வது தொடர்பில் சிரேஷ்ட பிரசைகசள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள் என்பதையும்;

(iv) இவ்வாறு தடுத்து வைக்கப்படுகின்ற நிதி, சமூக பாதுகாப்பு நிதியம் எனும் கணக்கில் வைப்புச் செய்யப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இதுவரை அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(ii) அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி சிரேஷ்ட பிரசைகளின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு ரூ100/= வீதம் தடுத்து வைப்பதை இடைநிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

138/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது உத்தியோகபூர்வ கடமை நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தைச் சேர்ந்த அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலரினதும் பெயர், பதவிப் பெயர் மற்றும் தொழில் செய்யும் இடம் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி அலுவலர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் செலுத்தப்படுகின்ற சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தற்போது எழுந்துள்ள கொவிட் – 19 தொற்று நோய் நிலைமைக்கு மத்தியில் மேற்படி அலுவலர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு அமைச்சு இதுவரை மேற்கொண்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

170/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாலம்பே தொடக்கம் கொழும்பு – கோட்டை வரை இலகு மின்சார புகையிரதக் கருத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருந்ததென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு மண் பரிசோதனை மற்றும் காணிகளைச் சுவீகரிப்பதற்கு ஏற்புடைய நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டம் தொடர்ந்தும் செயற்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டம் தொடர்பாக மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

232/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட விலங்குத் தீவினங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விலங்குத் தீவினங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி விலங்குத் தீவினங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு விலங்குத் தீவினங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

319/2020

கௌரவ புத்திக பத்திரண,— இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொகையில் அரசாங்க பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள பிள்ளைகளின் ரக்பி விளையாடும் திறமைகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ரக்பி விளையாட்டின் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு வீரர்களை வழிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை ரக்பி கட்டுபாட்டுச் சபை மற்றும் அத்துடன் இணைந்த ஏனைய சங்கங்களின் நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் சம்பந்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகளில் சம்பந்தப்படுகின்ற முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

549/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, கிங்தோட்டையில் அமைந்துள்ள கிங்தோட்டை ப்ளைவூட் தொழிற்சாலையில் (முன்னர் கிங்தோட்டை ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை) சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்குரிய ஊதியங்கள், கொடுப்பனவுகள், பணிக்கொடைக் கொடுப்பனவுகள் மற்றும் இழப்பீட்டுத் தொகை செலுத்துகைகள் உரிய முறையில் இடம்பெறுவதில்லை என்பதையும்;

(ii) இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளவென்பதையும்;

(iii) நீதிமன்றத்தின் மூலம் ஏற்புடைய பணிப்பாளர்களுக்கு எதிராக பிடியாணை விடுக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிடியாணையின் பிரகாரம் ஏற்புடைய பணிப்பாளருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படாதமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஊழியருக்குரிய ஊதியங்கள், கொடுப்பனவுகள், பணிக்கொடைக் கொடுப்பனவுகள் மற்றும் இழப்பீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) இன்றேல், ஏற்புடைய அலுவலர்களுக்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

848/2020

கௌரவ வருண லியனகே,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசிய வரவு – செலவு சுற்றறிக்கை 03/2016 இன் பிரகாரம், தாபிக்கப்பட்டுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் இயற்கை அனர்த்தங்களின்போது நட்டஈடு வழங்கும் வேலைத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் அனர்த்தங்களின்போது, ஒதுக்குப் பிரதேசங்கள் மற்றும் சட்டவிரோத காணிகளில் குடியிருப்பாளர்களுக்கும் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) ஆயினும், 01/2020 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ வழிகாட்டல் கோவையின் 04 (iii) ஆம் பந்தியின் கீழ், ஆதனத்தின் உரிமையை நிரூபிக்கும் காணி உறுதியின் பிரதி அல்லது ஏனைய பத்திரங்கள் தேவையென விதப்புரை செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இதன் காரணமாக அரசாங்கத்துக்குச் சொந்தமான ஒதுக்குப் பிரதேசங்கள், பாதைகளுக்கான ஒதுக்குப் பிரதேசங்கள் மற்றும் புகையிரத பாதைகளுக்கான ஒதுக்குப் பிரதேசங்கள் போன்ற காணி சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளில் சட்டவிரோதமாக குடியமர்ந்துள்ள நபர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மேலே (ஆ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நிவாரணங்கள் வழங்கப்படும் விதம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

854/2020

கௌரவ அஜித் ராஜபக்ஷ,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு 05, கிரிமண்டல மாவத்தை எனும் முகவரியில் பேணிச் செல்லப்படும் வ/ப ஆசிரி சத்திர சிகிச்சை வைத்தியசாலை அமைந்துள்ள காணியானது அவ்வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு முன்னர் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இருந்ததென்தை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணி, மேற்குறிப்பிடப்பட்ட வைத்திசாலையை நிர்மாணிப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக இக்காணி ஒப்படைக்கப்பட்டபோது, ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 பெப்ரவரி 11, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

31/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும் , புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் 2020 வரை இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குப் போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை என்பதையும்;

(ii) தற்போது அமுலில் உள்ள சட்ட விதிகள் காரணமாக முதலீட்டாளர்கள் அசௌகரியமடைகின்றனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) முதலீட்டாளர்களுக்கு மிகவும் துரிதமான சேவைகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

139/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் கீழ் தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவது தொடர்பில் பின்பற்றப்பட்ட நடவடிக்கை முறைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இற்றைவரை தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவர்கள் பணியாற்றும் தொழில் நிலையங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களின் கடமைப்பணிகளின் தன்மை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

172/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய கொழும்பு வைத்தியசாலையின் வெளி நோயாளார் பிரிவில் சிகிச்சை பெறுவதற்கு அன்றாடம் பெருமளவிலான நோயாளர்கள் வருகை தருகின்ற போதிலும், மேற்படி வைத்தியசாலைகள், தங்கியிருந்து சிகிச்சைப் பெறுவதற்குத் தேவையான வாட்டுத் தொகுதிகள் காணப்பட்ட போதிலும், தங்கி சிகிச்சை பெற்றுவரும் நபர்கள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்ற அதேவேளை வைத்தியசாலையைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் குடியிருக்கும் குடியிருப்பாளர்கள் கூட தங்கி சிகிச்சை பெறுவதற்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) மத்திய கொழும்பு வைத்தியசாலையில் வசதிகள் காணப்படுகின்ற போதிலும் தங்கி சிகிச்சை பெறுவதற்காக நோயாளர்கள் வேறு வைத்தியசாலைக்கு செல்வதற்கான இனங் காணப்பட்ட காரணங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான தீர்வுகளாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) (i) மத்திய கொழும்பு வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கு 2020 ஆம் வருடத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு தற்போது வரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளையும் அவற்றின் முன்னேற்றத்தினையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

233/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஆகாய விமானங்கள் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஆகாய விமானங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி ஆகாய விமானங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு ஆகாய விமானங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

320/2020

கௌரவ புத்திக பத்திரண,— இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஹொக்கி விளையாட்டை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொகையில் அரசாங்க பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள பிள்ளைகளின் ஹொக்கி விளையாடும் திறமைகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஹொக்கி விளையாட்டின் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு வீரர்களை வழிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை ஹொக்கி சம்மேளனம் மற்றும் அத்துடன் இணைந்த ஏனைய சங்கங்களின் நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் சம்பந்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகளில் சம்பந்தப்படுகின்ற முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

486/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம் எத்திகதியில் நிறைவேற்றப்பட்டது என்பதையும்;

(ii) அவ்வாறான ஒரு சட்டம் நிறைவேற்றப்படுவதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி சட்டத்தில் நெல் கொள்வனவு தொடர்பில் காணபடுகின்ற சட்ட ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நாடு முழுவதிலும் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொறிமுறை யாது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

531/2020

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்விடங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) அவ்விடங்களின் வரலாற்று ரீதியான பெறுமதியினை எதிர்கால சந்ததிக்காக பேணிப் பாதுகாப்பதன் பொருட்டு அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

564/2020

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் வருடாந்தம் நடத்தப்படுகின்றன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டனவா என்பதையும்;

(ii) இல்லையெனில், அது தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2020 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டனவா என்பதையும்;

(ii) இல்லையெனில், அப்போட்டிகளை நடாத்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

592/2020

கௌரவ எஸ். எம். எம். முஸாரப்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இலங்கையின் விளையாட்டுத் துறைக்கு பங்களிப்பு வழங்கிய பல விளையாட்டு வீரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பொத்துவில் பிரதேசத்திற்கு நீண்டகாலமாக ஒரு பொது விளையாட்டு மைதானம் இல்லாததால் பிரதேசத்தின் இளைஞர்களும் யுவதிகளும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், பொத்துவில் பிரதேசத்திற்கு ஒரு பொது விளையாட்டு மைதானத்தை அமைக்கும் திகதி யாதென்பதையும்;

(ii) இதற்காக கடந்த காலத்தில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

597/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாணம் மாவட்டத்தின், வேலணை பிரதேச செலயாளர் பிரிவின், நயினைத்தீவு பிரிவுக்கு உரித்தான ஒரே அரசாங்க வைத்தியசாலை நயினைத்தீவு வைத்தியசாலை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமனம் செய்யாமை காரணமாக மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) மேற்படி வைத்தியசாலைக்கு இதுவரை நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமனம் செய்யாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி பற்றிய தகவல்களையும்;

(iii) அம்மக்களுக்கு திருப்திகரமான மருத்துவ சேவையைப் வழங்குவதற்காக நயினைத்தீவு வைத்தியசாலையில் தற்போது நிலவுகின்ற பணியாட்டொகுதி வெற்றிடங்கள் நிரப்பபடும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

643/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள —

(i) தல்பிட்டிகல நீர்ப்பாசன கருத்திட்ட நிர்மாணப்பணிகளின் தாமதத்துக்கான காரணம் யாது;

(ii) 2015ஆம் ஆண்டு அடிக்கல் நடப்பட்டுள்ள கும்புக்கன் ஓயா நீர்ப்பாசனக் கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாது;

(iii) ஹெட ஓயா நீர்ப்பாசனக் கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

648/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு நாடு வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி சுற்றுலாப் பயணிகள் மூலம் இலங்கைக்குக் கிடைத்த அந்நியச் செலாவணி, மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) (i) இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சுற்றுலாப் விடுதிகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினால் இலங்கையில் புதிய சுற்றுலா விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சுற்றுலா விடுதிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

656/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வரையறுக்கப்பட்ட ஹபராதுவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நிர்வாகம் செய்யப்படுகின்ற கிராமிய வங்கியில் நிதி வைப்புச் செய்த வைப்பாளர்களது நிதி மீளச் சேலுத்தப்படாமை தொடர்பில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இதன்போது மோசடி செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அங்கு வைப்புச் செய்தவர்களுக்கு இதுவரையில் செலுத்தப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) வைப்பாளர்களுக்கு மேலும் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iv) எஞ்சிய வைப்பாளர்களின் நிதி மீள் செலுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நிதி மோசடி இடம்பெற்ற காலப் பகுதிகளில் பதவியில் இருந்த தலைவர்கள் உட்பட பணிப்பாளர்சபை உறுப்பினர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தலைவர்கள் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

780/2020

கௌரவ கே. காதர் மஸ்தான்,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) முன்னாள் புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் கீழ், வவுனியா பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடற்றவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வவுனியா பிரதேச செயலகப் பிரிவிற்கான 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு மத்தியில் வீடுகளை வழங்குவதற்காக 2019ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் இதுவரை வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி வீடு பெறுநர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் வீடுகள் ஒதுக்கப்படும் அடிப்படை யாது என்பதையும்;

(ii) கள்ளிக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கான ஆரம்பக் குடியிருப்பாளர்களுக்கும் பின்னர் குடியமர்த்தப்பட்டவர்களுக்கும் வீடுகளை ஒதுக்கீடு செய்கையில் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காரணிகள் யாவை;

(iii) மேற்படி வீடுகளை ஒதுக்கீடு செய்கையில் எழுந்துள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iv) இதுவரையில் வீடுகள் கிடைக்கப்பெறாதுள்ளவர்களுக்கு வீடுகள் வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

861/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான பள்ளிமுனை மற்றும் பரப்பாங்கண்டல் கிராமங்களிலும் நானாட்டான் பிரதேச செலயலகப் பிரிவுக்கு உரித்தான வங்காலை கிராமத்திலும் காணிகளை சுவீகரித்துள்ளதன் காரணமாக அப்பிரதேசங்களில் வாழும் மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(ii) 2019ஆம் ஆண்டில் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம் மேற்படி கிராமங்களுக்கு விஜயம் செய்து இப்பிரச்சினையை தீர்ப்பதாக மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளார் என்பதையும்;

(iii) ஆயினும், மேற்படி மூன்று கிராமங்களிலும் குடியேறியுள்ள பொதுமக்களது காணிப் பிரச்சினை இதுவரையில் தீர்க்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாது;

(iii) இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல். ஏன்?

---

## 2021 பெப்ரவரி 12, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

33/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கூரகல தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்காக இதுவரை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

140/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புகளைப் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இற்றைவரை வழங்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தொழில் பெறுனர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இந்நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் விரிவாக்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

234/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வாகனங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி வாகனங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

321/2020

கௌரவ புத்திக பத்திரண,— இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மேசைப்பந்து விளையாட்டை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொகையில் அரசாங்க பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள பிள்ளைகளின் மேசைப்பந்து விளையாடும் திறமைகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேசைப்பந்து விளையாட்டின் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு வீரர்களை வழிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை மேசைப்பந்து சம்மேளனம் மற்றும் அத்துடன் இணைந்த ஏனைய சங்கங்களின் நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் சம்பந்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகளில் சம்பந்தப்படுகின்ற முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

489/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலுமுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தேசிய பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) ஆகக் குறைந்த எண்ணிக்கையான தேசிய பாடசாலைகளைக் கொண்ட மாவட்டத்தின் பிரதேச செயலகங்களிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அமைச்சு எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

565/2020

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் போதனா வைத்தியசாலையினால் பாரிய சேவையாற்றப்பட்டு வருகின்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையிலுள்ள வாட்டுகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி வைத்தியசாலையில் காணப்படுகின்ற கட்டில்களின் எண்ணிக்கை;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக வருகை தருகின்ற நோயாளர்களுக்கு போதியளவு சேவை வழங்கத் தேவையான வசதிகள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

593/2020

கௌரவ எஸ். எம். எம். முஸாரப்,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்ட பின்னர் அப்பிரதேச கடற்கரை பெருமளவு கடல் அரிப்புக்கு உள்ளாகிவருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இந்த நிலைமையை தடுத்து நிறுத்துவதற்கு மணல் தடைகளை இடுதல் போன்ற தற்காலிக நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) கடல் அரிப்பினைத் தடுப்பதற்கு எதிர்காலத்தில் நிரந்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில் எத்தேதியில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) துறைமுகத்தை அமைத்ததன் காரணமாக காணிகளை இழந்துள்ள மக்களுக்கு துறைமுக அதிகாரசபையினால் மாற்றுக் காணிகள் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) ஆமெனில், அவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) காணிகளை இழந்தவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) மாற்றுக் காணிகளை வழங்கும்போது அனைவருக்கும் 20 பேர்ச்சஸ் வீதம் காணிகளை வழங்குவதன் மூலம் நிகழ்ந்த தவறு நிவர்த்தி செய்யப்படும் முறை யாதென்பதையும்;

(iv) துறைமுக அதிகாரசபையினால் அமைக்கப்பட்ட ஒழுவில் கட்டார் வீடமைப்புத் திட்டத்தின் பொதுப்பணிகளுக்கு காணிகளை ஒதுக்கித் தருவதாக வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

598/2020

கௌரவ சிவஞானம் சிறிதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலனை பிரதேச செயலகப் பிரிவில் வேலணை பிரதேச வைத்தியசாலை அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இவ்வைத்தியசாலைக்காக நிரந்தர வைத்தியரொருவர் நியமிக்கப்படாதுள்ளமையினால் பிரதேசத்திலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி வைத்தியசாலைக்காக அங்கீரிக்கப்பட்ட பதவியணி யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்கு இதுவரை நிரந்தர வைத்தியரொருவர் நியமிக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மக்களுக்கு திருப்திகரமான மருத்துவ சேவையினை வழங்குவதற்காக வேலனை பிரதேச வைத்தியசாலையில் தற்போது நிலவும் பதவியணி வெற்றிடங்களை நிரப்பும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

611/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டி பிரதேசத்தில் “மஹதுகலந்த வத்த” எனப்படும் சுமார் 85 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட, தெங்கு பயிர்செய்யப்பட்ட செழிப்பான ஒரு காணி இருந்தது என்பதையும்;

(ii) அது பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான காணி என்பதையும்;

(iii) அக்காணி நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றுக்குச் சொந்தமானது என்தையும்;

(iv) இந்தக் காணி வொக்ஸ்வகன் கார் தயாரிப்பு தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்காக “வெஸ்ரன் ஒட்டோ மொபயில்” (Western Auto Mobile) எனப்படும் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கம்பனிக்கு இந்தக் காணி எவ்வடிப்படையில் எவ்வளவு காலப்பகுதிக்கு வழங்கப்பட்டிருக்கின்றதென்பதனை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இக்காணியிலிருந்து வெட்டி அகற்றப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த தென்னை மரங்கள் எந்த அடிப்படையில் விற்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

638/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் தற்போது பணி புரியும் மருத்துவர்களின் எண்ணிக்கையானது தேவையான அளவை விட சுமார் நூற்றுக்குப் பத்து வீதம் குறைவாக உள்ளதென்பதையும்;

(ii) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற மருத்துவர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

772/2020

கௌரவ முஜிபுர் ரஹ்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு மாநகர சபை பிராந்தியத்தில்/ மாநகர சபை எல்லையில் உள்ள தேசிய பாடசாலைகளில் அங்கு வசிக்கின்ற வறிய நகர்ப்பிரதேச பிள்ளைகளுக்கு தரம் ஒன்றிற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வது பெரும்பாலும் முடியாத விடயமாக உள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறெனில், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் இருக்கின்ற தேசிய பாடசாலைகளின் பெயர்களையும்;

(ii) சமயம் மற்றும் சமயம் சாராத வகையில் வகைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் எவையென்பதையும்;

(iii) போதனா மொழி அடிப்படையில் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிக்காக ஒதுக்கப்பட்ட வகுப்புகளின் எண்ணிக்கையையும்;

(iv) மும்மொழி தேசிய பாடசாலைகளில் தரம் 1 முதல் 5 வரை தமிழ் மொழியில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையையும்;

(v) ஒவ்வொரு பாடசாலையிலும் போதனா மொழி, இனம் மற்றும் சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையையும்;

அவர் கூறுவாரா?

(இ) (i) தற்போது தரம் ஒன்றிற்கு மாணவர்களை அனுமதிக்கின்ற செயன்முறை தொடர்பில் அரசாங்கம் திருப்தியடைகிறதா என்பதையும்;

(ii) பல தலைமுறைகளாக பாடசாலைக்கு அருகில் வசிக்கின்ற பெற்றோர்களது பிள்ளைகளுக்கு விசேட ஒதுக்கீடுகளை மேற்கொள்வதன் மூலம் பல்வேறு இன, சமய, சமூகப் பின்புலங்களைக் கொண்ட மாணவர்களுக்கு அதிக இடம் ஒதுக்க முடியுமா என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

774/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன் ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் சொந்தமான பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற குடிநீர், மலசலகூடம், ஆய்வுகூடம், நூலகம் மற்றும் விளையாட்டு வசதிகள் இல்லாத பாடாசலைகளின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இம்மாவட்டத்தில் மேற்குறிப்பிட்ட குறைபாடுகளுடன் கூடிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

781/2020

கௌரவ கே. காதர் மஸ்தான்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆண்டு தொடக்கம் 2015 ஆண்டு வரை அப்போதைய தேசிய கொள்கைகள், பொருளாதார நடவடிக்கைகள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கு புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக பல்வேறு நாடுகள் மற்றும் நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் வகைகள், அவற்றின் பதிவு இலக்கங்கள் மற்றும் அவை பயன்பாட்டுக்காக வழங்கப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) அவ்வாகனங்களின் தற்போதைய நிலை யாதென்பதையும்;

(iii) அவ்வாகனங்களை தற்போது பயன்படுத்தும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள WP RB- 2639 எனும் பதிவிலக்கத்தைக் கொண்ட உழவு இயந்திரத்தைப் பயன்படுத்திய அமைச்சு மற்றும் அதன் உரிய பிரிவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2009 ஆண்டு தொடக்கம் 2012 ஆண்டு வரை மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் வகைகள் மற்றும் பதிவு இலக்கங்கள்;

(ii) தற்போது அவ்வாகனங்களைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் இடங்கள்;

வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

862/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள விவசாயக் குளங்களை புனரமைப்பதற்கும், விவசாயிகளுக்கு உரித்தான விவசாய நிலங்களை வெட்டித் துப்பரவு செய்வதற்கும் வனப் பாதுகாப்பு திணைக்களம் தடை விதித்துள்ளது என்பதையும்;

(ஆ) (ii) மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம், முசலி பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான காயக்குலி கிராமத்துக்கு அருகில் அமைந்துள்ள 20 ஏக்கர் காணியை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ள மக்களை மீள்குடியமர்த்துவதற்காக வழங்குமாறு கோரி, வனப்பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்துக்கு கடிதமொன்று ஆற்றுப்படுத்தப்பட்டு தற்போது சுமார் இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும், அக்கோரிக்கை இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், மேற்படி காணியை மேற்குறிப்பிட்ட விடயத்துக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

882/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களுக்கு 2010 இல் செலவிடப்பட்ட மொத்தத் தொகையை தனித்தனியாக அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) உயர்கல்வி விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை (AHEAD) கருத்திட்டத்தின் துரிதப்படுத்தலின் கீழ், உயர் கல்விக்காக உலக வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த கடன் பெறுமதியையும்;

(ii) உலக வங்கியின் கடன்களின் ஊடாக, உயர் கல்விக்காகக் செலவழிக்கப்பட்ட அரசாங்க செலவினத்தின் நூற்றுவீதத்தையும்;

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சான்றுப்படுத்தப்பட்ட தனியார் உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடன்களின் நூற்றுவீதத்தையும்;

(iv) AHEAD கருத்திட்டத்தின் கீழ், மாற்றுப் பதவி அமர்த்துகை (secondment) அடிப்படையில் பணியாற்றுவதற்கு கல்வியமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள, அரச உயர் கல்வித் துறையின் பணியாட்களின் எண்ணிக்கையையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?